Manufacture of Basic Medicines

* 14. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to have the basic medicines manufactured at Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: இப்பொழுது ஆரம்பச் சுகாதார நிலையங்கள், மருத்துவ மனைகள் ஆகியவைகளுக்குத் தேவையான மருந்துகள் கிடைக்கவில்லை என்ற குறைபாடுகள் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அதைத் தடுக்க இவ்வாறு தேவையான மருந்துகள் தயாராக ஆதரவாக இருக்கும்படி அதற்கான நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அது பொது நலத் துறையிலே கேட்க வேண்டிய கேள்வி. இப்பொழுது தமிழ் நாட்டிலே ஐந்து தொழிற்சாலைகள் மருந்துகள் தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கின்றன. ஐ.ஸி.ஐ. என்ற ஒரு பெரிய நிறுவனம் சுமார் 233 லட்சம் செலவில் ஒரு புதிய தொழிலை மருந்து உற்பத்திக்காகத் தமிழ் நாட்டில் தொடங்கவேண்டும் என்ற முயற்சியைப் பல ஆண்டுகளாக எடுத்துவருகிறார்கள். நம்முடைய அரசின் சார்பிலே செய்யவேண்டிய உதவிகளையெல்லாம் அவர்களுக்குச் செய்துவிட்டோம். மத்திய அரசு இன்னும் அதைப்பற்றிப் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

சாணார்பட்டி, வட மதுரை வட்டாரத்தில் நில நீர்வள ஆய்வு.

* 15 வினா—**திரு. க. நாகராஜன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

Ground Water Cell அமைப்பின் மூலம் சாணார்பட்டி, வட மதுரை, ஆகிய வட்டாரங்களில் நிலநீர்வளம் குறித்து ஆய்வு நடத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

திரு. க. நாகராஜன்: தலைவர் அவர்களே, சாணார்பட்டி, வடமதுரை ஆகிய வட்டாரங்களில் நிலநீர்வளம் குறித்து ஆய்வு நடத்தப்படாத நிலையில் கூட பினான்ஷியல் இன்ஸ்டிடியூஷன் எதுவும் கிணறுகளை ஆழப்படுத்துவதற்குக்

1972 ஆகஸ்ட் 9]

கடன் வழங்க முன்வருவதில்லை. எனவே, விரைவிலே ஆய்வு நடத்திவிட்டால் ஒன்று கடன் வழங்கக்கூடாது என்று ஒரு குறித்த சட்டம் இயற்ற வாய்ப்பு இருக்கும் அல்லது அதுவரையிலாவது கடன்கள் வழங்க வழி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் உள்ள நிலைமைகளை ஆய்வு செய்வதற்காக ஒரு இலாகா அமைக்கப் பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகள் அந்தத் துறையின் மூலம் இப்போது செயலாற்றப்பட்டு வருகின்றன. இப்போது முழுவதுமாக ஏழு கோட்டங்கள் அமைக்கப்பட்டு, அந்தக் கோட்டங்கள் மூலமாக இந்த ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மதுரையிலுள்ள நில-நீர் கோட்டம் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடங்களிலே இந்த ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தலைமை வேளாண்மை இயக்குனர் மேற் பார்வையில் இப்படிப்பட்ட திட்டங்களுக்கான ஆய்வுகள் நடந்துகொண்டு இருக்கின்றன.

கிழத்திருத்தங்கல் புதிய கண்மாய்

** 16. வின—திரு. **கா. காளிமுத்து** : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தூர் வட்டம், கிழத்திருத்தங்கல் புதிய கண்மாய்த் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்போது அது முடிவடையும்?*

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ரூ. 2,00,000.

(இ) 1973-ஆம் ஆண்டு செப்டம்பர் மாத அளவில் முடிக்கப்படும்.

மீனுட்சிபுரத்தில் புதிய கண்மாய்

** 17. வின—திரு. **சௌடி எஸ். சுந்தரபாரதி** : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) அருப்புக்கோட்டைத் தாலுக்காவில் மறவர் பெருங்குடி மீனுட்சி புரத்தில் புதிய கண்மாய் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் செயல்படுத்தப்படும்?*

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) இத்திட்டம் பரிசீலிக்கப்பட்டு, தண்ணீர் போதுமானதாக இல்லையால் ஒத்திவைக்கப் பட்டுள்ளது.